# பண்டா-செல்வா ஒப்பந்தம் தோல்வியடைந்தமைக்கான காரணமான முதலடி (First Step) நூல் பற்றிய ஓர் ஆய்வு

அ.அன்பரசி
முதுதத்துவமாணி ஆய்வு புலமையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
anparasi83@gmail.com
T.P-077- 8736719

இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் உட்பட அனைத்துப் பிரதேச மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை 45 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட தீர்வு நடவடிக்கைகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதலாவது ஒப்பந்த ஆவணமாக பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தம் காணப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் செயற்படுத்த முடியாது போனாலும் அது பின் வந்த ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இந்த உடன்படிக்கை இலங்கைப் பிரதமர் எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் 1957 ஆம் ஆண்டு கைச் சாத்திடப்பட்டது. பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு அரசியலாலும், மற்றும் பல்வேறு காரணங்களினாலும் பண்டா செல்வா ஒப்பந்தம் தோல்வியடைய நேரிட்டது.இதற்கு உடனடிக் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியினர் முதலடி என்ற (குசைளவ ளுவநி) நூலை வெளியிட்டது. இவ் நூலே இவ் உடன்படிக்கை தோல்வியடைய உடனடிக் காரணமாகும். இவ் ஆய்வின் முதலாம்நிலை தரவுகளாக நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள்இ பத்திரிகை செய்திகள் மூலமும் இரண்டாம்நிலை மூலகங்களாக பேட்டிகாணல் , அவதானம் போன்றவை மூலமும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வு வரலாற்று ஆய்வு முறை, ஒப்பீட்டு ஆய்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது எதிர்கால ஆய்வுகளுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

**திறவுச் சொற்கள்:-** ஒப்பந்தம், பண்டா-செல்வா உடன்படிக்கை, முதலடி, பௌத்த பிக்குமார், ஐக்கிய தேசியக் கட்சி

## அறிமுகம்

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் உட்பட அனைத்துப் பிரதேச மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை 45 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட தீர்வு நடவடிக்கைகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதலாவது ஒப்பந்த ஆவணமாக பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தம் காணப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் செயற்படுத்த முடியாது போனாலும் பின் வந்த ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினைக்கான முதல் தீர்வு முயற்சியாக உருவான ஒப்பந்தம், பண்டா-செல்வா உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கை இலங்கைப் பிரதமர் எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் 1957 ஆம் ஆண்டு கைச் சாத்திடப்பட்டது. தனிச்சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டதை இலங்கை வரலாற்றில் காணமுடிகிறது.[1]அமைச்சர் டி. சொய்சா சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வருடாந்த மகாநாட்டிற்காக யாழ்ப்பாணம் வந்த போது மக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர், கிழக்கு மாகாணம் சென்ற கல்வி அமைச்சர் தகநாயக்காவுக்கும் பலத்த எதிர்ப்புக் கிடைத்தது. இவ்வாறான குழப்பங்கள் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகியிருந்தன.

இதன் பின் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண எண்ணி பல இரவுகள் பிரதமர் பண்டாரநாயக்கா தலைமையில் அமைச்சர்களுக்கும், தந்தை செல்வநாயகம் தலைமையில் கட்சித் தலைவர்களுக்குமிடையில் பேச்சு நடைபெற்றது. இறுதியில் 1957 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 26 ம் திகதி பண்டா- செல்வா ஒப்பந்தம் நள்ளிரவில் கைச்சாத்திடப்பட்டது.[2] இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து நடைமுறைப்படுத்த எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.மாறாக குழப்பங்களே உருவாகின. இதன் ஆரம்பமாகவே முதலடி என்ற நூல் வெளியிடப்பட்டு வீடு வீடாக விநியோகிக்கப்பட்டன. இது இனவாதத்தை தூண்டிய செயற்பாடாக அமைந்தது.

இதில் பண்டா செல்வா ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமைந்து விட்டது என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை தூண்டி விடுவதே இதன் நோக்கமாகும். மற்றும் ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதை எந்த விதத்திலும் தடுத்து விட வேண்டும் என்பதே நோக்கமாகும். அதாவது தமிழன் தனிநாடு அமைப்பதற்கான முதலடி இந்த ஒப்பந்தம் என வர்ணித்தது.

**ஆய்வின் நோக்கம்**

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு முதலாவது தீர்வு முயற்சியாக பண்டா – செல்வா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 1956 ஆம் ஆண்டு பௌத்த மதத்திற்கும்,சிங்கள மொழிக்கும் முதன்மை கொடுத்ததைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு தீர்வாக பண்டா – செல்வா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இப் பண்டா - செல்வா உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று இலங்கையில் இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.இவ் ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைய ஐக்கிய தேசியக் கட்சியினர் வெளியிட்ட முதலடி என்ற நூலே உடனடிக் காரணமாகும்.இவ் நூல் மூலம் தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையிலான இனவாதப் பிளவை ஏற்படுத்த முயற்சித்தமையால் ஏற்பட்ட தாக்கங்களை ஆய்வு செய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு வரலாற்று ஆய்வு முறை, ஒப்பீட்டு ஆய்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலாம்நிலை தரவுகளாக நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள்இ பத்திரிகை செய்திகள் மூலமும் இரண்டாம்நிலை மூலகங்களாக பேட்டிகாணல் (Interview), அவதானம் (Observation) போன்றவை மூலமும் பெறப்பட்டுள்ளன.

**பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் தோல்வியில் முதலடி (First Step) நூல் பெறும் முக்கியத்துவம்**

இலங்கையில் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையே நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முயற்சிகளும், ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று அவை செயற்படாது போனதும் தமிழ் மக்கள் காலம், காலமாக ஏமாற்றப்பட்ட போது சொல்லவொண்ணா துன்பங்களையும், இழப்புக்களையும் சந்தித்தமை நாட்டில் நிலவிய துன்பவியலான ஒரு விடயமாகும். இலங்கை இனப்பிரச்சினையின் இத்தீர்வு முயற்சிகள் செயற்படுத்த முற்பட்ட போது ஏற்பட்ட நன்மை, தீமைகளையும் அவை தோல்வியடைந்தமைக்கான காரணங்களையும் ஆராய்வது பொருத்தமானதாகும். ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முற்பட்ட வேளையில் தம்முடைய சொந்த நலன்களுக்காக நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி பௌத்த பிக்குகளின் ஆதரவுடன் ஒப்பந்தத்தை கைவிடும்படி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.[3]

1. ஐக்கிய தேசியக்கட்சி முதலடி (First Step) என்ற நூலை வெளியிட்டது. அதாவது தமிழன் தனிநாடு அமைப்பதற்கான முதலடி இந்த ஒப்பந்தம் என வர்ணித்தது.[4]
2. முதலாவதாக சிங்களம் மட்டும் சட்டத்தினை பிளவுபடுத்தும் தாக்கத்தை வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு பண்டாரநாயக்காவின் அணுகுமுறை பற்றிய பொது மதிப்பீட்டை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
3. மோட்டார் வாகனங்களின் இலக்கத்தகடுகளில் சிங்கள ஸ்ரீ என்ற எழுத்தைச் சேர்க்க வேண்டும் என அரசாங்கம் கட்டளையிட்டது. இதனை எதிர்த்து தமிழரசுக்கட்சி தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்கள ஸ்ரீ இடப்பட்ட பேருந்துகள் அனுப்புவதை எதிர்த்து " தமிழ்ச் சிறீ" எழுத்துக்களை மாற்றும் இயக்கத்தில்

ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து சிங்களப் பிரதேசங்களில் தமிழ் எழுத்துக்களை அழிக்கும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.[5]

பண்டாரநாயக்காவின் இலட்சியங்கள் இனத்துவ அமைதிக்கு என்ன பொருத்தப்பாடு உடையன என்பதைப் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் ஆக்கத்தையும் அழிவையும் அசைமீட்டுப் பார்த்து எந்தப் பரந்த முடிவிற்கும் வரமுடியாது. முதலாவதாக சிங்களம் மட்டும் சட்டத்தின் பிளவுபடுத்தும் தாக்கத்தை வைத்துக்கொண்டு இனப்பிரச்சினைக்கு பண்டாரநாயக்காவின் அணுகுமுறை பற்றிய எந்தப் பொது மதிப்பீட்டையும் உண்மையில் தொடங்க முடியாது. பண்டா-செல்வா ஒப்பந்தம் என்றுமே நிறைவேற்றப்படவில்லை என்பதில் ஐயமில்லை. ஆயினும் ஒப்பந்தத்தில் இடம்பெறும் கருத்து நிலைகளும், எண்ணங்களும் பின்வந்த இனத்துவ தீர்வுக் காண எல்ல முயற்சிகளிலும் கட்டுமாணக் கற்களாகவே இருந்திருக்கின்றன.[6]

இப் பண்டா – செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் கண்டி யாத்திரை இடம்பெற்றது. இவ்வொப்பந்தத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி முதலடி (First step) என்ற நூலை வெளியிட்டது. பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாட்களில் ஐக்கிய தேசியக் கட்சியால் இப் புத்தகம் பிரசுரிக்கப்பட்டு சிங்கள மக்களிடையே விநியோகிக்கப்பட்டது. இதில் பண்டா செல்வா ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாக அமைந்து விட்டது என்று சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை தூண்டி விடுவதாகும். மற்றும் ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதை எந்த விதத்திலும் தடுத்து விட வேண்டும் என்பதே நோக்கமாகும். அதாவது தமிழன் தனிநாடு அமைப்பதற்கான முதலடி இந்த ஒப்பந்தம் என வர்ணித்தது.

இப் புத்தகத்தின் முதற் பக்கத்தில் பின்வரும் வாசகம் குறிக்கப்பட்டிருந்தது.[7]



யூ. என். பி. 1957-ல் வெளியிட்ட 'முதலடி' என் நூலின் அட்டைப் படம் இதுதான்.

> "அதாவது ஒவ்வொரு குடும்பமும் இந்தப் படத்தை தங்கள் வீட்டில் தொங்க விட வேண்டும். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை அழிக்கப்படும் வரை அப்படத்தைக் கீழேயிறக்க கூடாது."

உடன்படிக்கை இலங்கையில் தமிழரசை நிறுவுந் திட்டத்தின் முதலடி எனச் சிங்கள இனத்திற்கு எச்சரிக்கை விடுவதாக அமைந்தது. பிரசுரத்தின் படம் தமிழரசுக்கட்சி முதலடி வைத்து இலங்கையின் பெரும்பாகத்தைப்

பிடித்துக் கொண்டுள்ளது. மற்றைய அடியையும் வைத்தால் இலங்கை பூராவையும் சொந்தமாக்கி கொள்ளும். உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இரண்டு முக்கிய அம்சங்களை எடுத்து அவற்றிக்கு வியாக்கியானம் கொடுத்து நன்கு கண்ணில் படத்தக்கவாறு புத்தகத்தில் பிரசுரித்திருந்தது. அந்த இரண்டு அம்சங்களில் ஒன்று பிரதேச சபைகளிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறப்படும் விசேட அதிகாரங்கள். மற்றையது குடியேற்றத்திட்டம் பற்றிய ஒழுங்குகள் இன்னும் தமிழ் மொழிக்கு இவ்வுடன்படிக்கை பிரகாரம் அளிக்கப்படவிருந்த அந்தஸ்து பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேச சபைகளின் அதிகாரத்துள் அடங்கும் குடியேற்றத்திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் சுமார் பத்து இலட்சம் ஏக்கர் நீரப்பாய்ச்சல் வசதியுள்ள வேளாண்மைப்பூமி தமிழர்களுக்கு உடன்படிக்கை மூலம் கையளிக்கப்படுகிறது என எடுத்துக் காட்டப்படுகிறது.[8] கைத்தொழில்வளம் பற்றிக் குறிப்பிடுகையில் தேசிய சொத்தான வாழைச்சேனை காகித தொழிற்சாலை, கல்ஓயா, கந்தளாய் ஆகிய இடங்களில் சீனி செய்வதற்கான ஸ்தாபனங்கள் கிளிநொச்சியிலுள்ள டி.டி.ரி சோடா உற்பத்தி செய்யும் ஆலைகள், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பு உற்பத்திக்களம், புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடித்துறைகள் யாவும் தமிழருக்கு சொந்தமாகின்றன என்று எழுதப்பட்டிருந்தது.

தமிழ்மொழிக்கு இவ் உடன்படிக்கையின்படி கொடுக்கப்படவிருந்த அந்தஸ்தைப் பற்றி பின்வரும் கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் தம் பிரசுரத்தில் சுட்டிக் காட்டியிருந்தனர்.[9]

1. இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மையினத்தின் மொழி தமிழ்மொழி என்பதை அரசாங்கம் அங்கீகரித்து விட்டது.
2. அம்மொழி தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க நிர்வாக மொழி என்று தீர்மானிக்கப்பட்டதால் வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ் நிர்வாக மொழியாகியது.
3. தமிழ் பிரதேசங்களில் வாழும் சிங்களவர்க்கு அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்துத் செய்யும் வகையில் தம் சிங்கள மொழியை உபயோகிக்க வசதி செய்யப்படும் என்ற வசனத்தையும், சிங்கள பிரதேசங்களில் வாழும் தமிழர்கட்கு தமிழ்மொழியை உபயோகிக்க வசதி செய்யப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

ஆரம்ப காலம் தொடக்கம் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை பௌத்தகுருமாரும், சிங்கள தீவிரவாதிகளும் எதிர்த்து வந்தனர். ஐக்கிய தேசியக்கட்சியினரும் தீவிர பிரசாரம் செய்து எதிர்ப்புக்குத் தூபம் போட்டு வளர்த்தனர். இவற்றுக்கு அஞ்சிய பிரதமர் முன் குறிப்பிட்டதைப் போல ஒப்பந்தத்தை அமுல் நடத்தாது காலம் கடத்தினார். அத்துடன் தமிழ் மக்களுக்கு பாதகமான பல காரியங்களையும் அரசாங்கம் தொடர்ந்து செய்து வந்தது. பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து இவ் முதலடி நூல் ஒவ்வொரு வீடுகளிலும் பிரசார நோக்கில் விநியோகிக்கப்பட்டமை 1957 இல் இருந்து இலங்கையின் அரசியல் புதிய இனவாத பரிணாமத்துடன் வளரும் போக்கை கொண்டு வந்தது. எவ்வளவு விரைவாக ஒப்பந்தம் ஏற்பட்டதோ அவ்வளவு விரைவாக இவ் ஒப்பந்தம் தோற்றுப் போனது. இது இலங்கை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் முதலாவதாக தோற்றுப்போன ஒப்பந்தம் ஆகும். .இங்கு கிழித்தெறியப்பட்டது வெறும் ஒப்பந்தம் மட்டுமல்ல, இலங்கையில் சிங்கள – தமிழ் மக்களிடையேயான இணக்கப்பாடு பற்றிய நம்பிக்கையும் சேர்த்தே கிழித்தெறியப்பட்டது. இதற்கு முதலடி என்ற இவ் நூல் அடிப்படையாயிற்று எனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

1. Fkhhp n[ath;j;jdh.>(1995)> *,yq;ifapy; ,d th;f;f Kuz;ghLfs;*>nrd;id>g.100.
2. Wilson.A.J.,(1988),*The Break up of Srilanka the sinhalases Tamil conflict,*C.Hurst &Company ,London.p,105.
3. Hansard .,1958-1959.vol.31.
4. Kfk;kJ rkPk;.m.>(1990)> *xU rpWghd;ikr; r%fj;jpd; gpur;rpidfs;*.IV,gg.56,58.
5. <oehL (1989.08.24).> "*Kwpe;J Nghd xg;ge;jq;fs;*".
6. Rje;jpud; ntspaPL.> (23.05.1970),"*Kjyb*"njhlh; fl;Liu .
7. Sinha Ratnatunga.,(1988),*Politics of Terrorism: The Srilanka Experience,* Austraila.p.186.
8. rj;jparPyd;.r.>(1994)> *,yq;if murpaypy; nkhopAk; kjKk;*>aho;g;ghzk;>g.8
9. Mendis,G.C.,(1963),*Ceylon Today and Yesterday*.The Associated news papers of Ceylon.P.201.

**உசாத்துணை நூல்கள்**

1. Bandaranaike, S.W.R.D.,(1961), Towards the New Era, Department of Information, Colombo.
2. Bandaranaike – Chelvanyalam Agreement of 1957.
3. Bandaranaike, S.W.R.D., "Message by the Prime Minister", Sri Lanka, Freedom Party Annual Number, 1958, Colombo.
4. Wilson.A.J.,(1988),The Break up of Srilanka the sinhalases Tamil conflict,C.Hurst &Company ,London.
5. சத்தியசீலன்.ச.,(1994), இலங்கை அரசியலில் மொழியும் மதமும்,யாழ்ப்பாணம்.
6. Phadnis Urmila.,(1976), Religion and Politics in Sri Lanka, Manohar, New Delhi.
7. ஜெயவர்த்தனகுமாரி.,(1990), இனத்துவமும் சமூக மாற்றமும்,சமூகவியல் மன்ற வெளியீடு,யாழ்ப்பாணம்.
8. குமாரி ஜெயவர்த்தனா.,(1995)> இலங்கையில் இன வர்க்க முரண்பாடுகள்,சென்னை.